குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 2/2024

அ.சா. **1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கதிரவன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பெருமாள் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 50 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **12.09.2024**

**(**எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை :

1) நான் தற்போது தர்மபுரி வன மண்டலம், தர்மபுரி வனக்கோட்டம் பாலக்கோடு வனச்சரகம் பிக்கனகல்லி பிரிவில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.06.2021ம் தேதி ஒசூர் வனக்கோட்டம், வனச்சரகம் காருபெல்லா பிரிவு வனவராக பணிபுரிந்து வந்தேன். 08.06.2021ம் தேதி காலை தீர்த்தம் அருகில் யாணை ரோந்துபணியில் என்னுடன் வனக்காப்பாளர் திரு.செல்வராஜ் மற்றும் கும்பளம் பீட் வனக்காப்பாளர் திரு.ரவி ஆகியோருடன் ரோந்து பணியில் இருந்தபோது காலை 05.00 மணியளவில் கும்பளம் காப்புக்காடு 1 பெரியகுத்தி கிராமத்திற்கு அருகில் முனீஸ்வரன் கோவில் பகுதியில் இரண்டு நபர்கள் துப்பாக்கியுடன் வேட்டையாடுவதற்காக நடமாடிக்கொண்டிருந்தார்கள். நானும் எனது குழுவினருடன் சம்பவ இடம் சென்று கண்காணித்தபோது எதிரிகள் இருவரும் துப்பாக்கியுடன் மருந்துப்பையுடன் காப்புக்காட்டில் சுற்றித்திரிந்ததை கண்டுபிடித்தோம். அவர்கள் வரும் வழியை அடையாளம் கண்டு அவர்கள் வந்தவுடன் நானும் எங்கள் குழுவினரும் சேர்ந்து அவர்களை பிடித்து விசாரணை செய்தபோது ஒரு கள்ளத்துப்பாக்கி மற்றும் மருந்துப்பைகள் எச் நமூனாவின் மூலம் வனக்காப்பாளர் திரு.செல்வராஜ் மற்றும் கும்பளம் பீட் வனக்காப்பாளர் திரு.ரவி ஆகியோர்கள்

முன்னிலையில் கைப்பற்றப்பட்டன. பிறகு விசாரணை செய்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக திரு.செல்வராஜ் மற்றும் திரு.ரவி ஆகியோர்கள் கையெழுத்திட்டனர். **(**மேற்படி எச் நமூனா அ.சா.ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**

**(**எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் வனவரிடம் வழங்கப்பட்ட காரணத்தினால் அவை சட்ட முறைக்கு புறந்தான குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களாகும்**,** ஆகவே அவை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு **25**ன் கீழ் பாதிக்கப்படாது**).**

ஆகவே **(**மேற்படி **1**ம் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது அ.சா.ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**), (**மேற்படி **2**ம் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது அ.சா.ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**

2) பிறகு எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்புவதற்காக ஒசூர் வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டு ஒசூர் வனச்சரக அலுவலரிர் அவர்களிடம் ஒப்படைத்தோம். பிறகு விசாரணை மேற்கொண்டு அவர்கள் மீது WLOR No.2/2021 சட்டப்பிரிவு வனப்பாதுகாப்புச்சட்டம் 2, 21 (21 டி மற்றும் எச்) மற்றும் 41, 51, 53, 60 மற்றும் வன உயிரின பாதுகாப்புச்சட்டம் 1972 பிரிவு 9 மற்றும் 50 மற்றும் 53-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் எதிரிகள் இருவரையும் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. வனச்சரக அலுவலர் விசாரணை செய்தபோது அவருக்கு நான் உதவியாக இருந்தேன்.

<u>வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.